**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**பி.வா.சா. –1 – கலையரசி**

**நாள்.12.10.2023**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த சாட்சி மூலமாக 08.02.2010ம் தேதியிட்ட ஆறுமுக கவுண்டர் எழுதி வைத்த உயில் சாசனம் குறியீடு செய்ய முடியாது என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் சாந்திதேவி Vs தரோத்தி தேவி மற்றும் சிலர் 2007(1) CTC 262 என்ற முன் தீர்ப்பை முன்வைத்து வாதிட்டார். மேற்படி முன்தீர்ப்பில் கீழமை நீதிமன்றம் உயிலின் அடிப்படையில் உரிமை கோரும் (Propounder on the will) நபர் இல்லாத மற்றவர் மீது நிருபிக்கும் சுமை (Burden of Proof) சுமத்தப்பட்டது தவறு என்றும் அதனால் மேற்படி வழக்கை கீழமை நீதிமன்றத்திற்கு மீட்டனுப்பி உள்ளது. மேற்படி முன்தீர்ப்பில் சாட்சி கையொப்பம் போட்ட நபர் மூலமாக உயிலை தாக்கல் செய்ய முடியாது என்றோ, குறியீடு செய்ய முடியாது என்றோ சொல்ல முடியாது. எனவே இந்த முன்தீர்ப்பு சாட்சி மூலமாக மேற்படி 08.02.2010ம் தேதியிட்ட உயிலை குறியீடு செய்ய முடியாது என்பதை பொறுத்து பொருந்தாது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு மேற்படி உயில் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யலாம் என்று கருதப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | – | வழக்கு சொத்துக்கான கணினி மின்னனு பட்டா மற்றும் FMV வரைபடம் கணினி பதிவிறக்க நகல். |
| பி.வா.சா.ஆ.5 | – | தாவா சொத்திற்கான பானுப்பிரியா பெயரில் வழங்கப்பட்ட கிஸ்தி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.6 | – | ஆறுமுக கவுண்டரின் IOB வங்கியின் பாஸ் புத்தகம் அசல் |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை – ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.10.12 16:51:38 +0530

Additional District Judge,

Dindigul.